32—

வாய்க்கால் செப்பனிடுதல்

***27476–திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதியிலுள்ள திருத்தலையூரில் அமைந்துள்ள ஏரியைத் தூர் எடுத்து வாய்க்கால் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நிதி நிலைமைக்கு ஏற்ப, பணி வருங்காலங்களில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருமதி மல்லிகா சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதியில் அமைந்துள்ள திருத்தலையூர் ஏரியில் தேங்கும் பாசன நீர் மூலமாக சுமார் 1,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. இதனால், அதைச் சுற்றியுள்ள 25, 30 கிராமங்கள் பயனடைகின்றன. அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, பாசன நீர் வீணாகாமல் செல்ல வாய்க்கால்களைச் செப்பனிட்டு, ஆண்டு முழுவதும் பாசன நீர் தேங்கி நிற்கும் அளவிற்கு அரசு ஆவன செய்யுமா என்று பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், திருத்தலையூர் கிராமத்தில் திருத்தலையூர் பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரி என இரண்டு ஏரிகள் அமைந்துள்ளன. இந்த இரண்டு ஏரிகளும் பொதுப் பணித் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ளன. இதன் பாசனப் பரப்பு முறையே, 421.55 ஏக்கர் மற்றும் 228.89 ஏக்கராகும். திருத்தலையூர்*

2004 ஜூலை 30]

ஏரியின் கரை பலப்படுத்துதல் மற்றும் வரத்து வாய்க்கால் செப்பனிடுதல் ஆகிய பணிகள், 2003–2004 ஆம் ஆண்டில் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில், ரூ.12 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன. திருத்தலையூர் ஏரியின் வரத்து வாய்க்கால் பணியின் முதற் பகுதி 2001–2002 ஆம் ஆண்டில் உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில், ரூ.4 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. திருத்தலையூர் சின்ன ஏரியின் கரை மற்றும் வரத்து வாய்க்கால் 2002–2003 ஆம் ஆண்டில் B, C, D வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் ரூ.3.42 இலட்சத்தில் பலப்படுத்தப்பட்டுள்ளன. சின்ன ஏரியின் பழுதடைந்த மதகு, இந்த ஆண்டு 2004–2005 சிறப்பு மராமத்துப் பணியில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, திருகுப் பலகை பொருத்தப்பட்டு உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயம், ஏரிகளை நம்பியே இருக்கிறது. ஏரிகளுக்குத் தண்ணீர் வருவதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும். அதற்கு மாநில அளவிலேயே ஒரு mass project, ஒரு mass plan, போட்டு இதுபோன்ற வாய்க்கால்களைத் தூர்வாருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொடர்ந்து பருவ மழை பொய்த்து வருவதன் காரணமாகவும், கர்நாடக அரசு நமக்குத் தரவேண்டிய நீரைத் தராத சூழ்நிலையாலும், கிடைக்கின்ற மழை நீரை, இருக்கின்ற ஏரி, குளங்களில் நிரப்பிக் கொள்வதற்கும், அது போதவில்லையென்றால் புதிதாக ஏரி, குளங்கள் அமைப்பதற்கும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், தமிழகத்தின் முன்னோடித் திட்டமாக இராமநாதபுரத்தில் இருக்கின்ற ஏரிகள், குள்ங்கள், வரத்து வாய்க்கால்கள் அத்தனையையும் செப்பனிடுவதற்குத் திட்டமிட்டு, அந்தப் பணி முதற்கட்டமாக 24 கோடி ரூபாயில் எடுக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன், இரண்டாம் கட்டமாக இராமநாதபுரத்தில் இருக்கின்ற அத்தனை ஏரி, குளங்களையும் செப்பனிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும், தூர்வாருவதற்கும் நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள் ஆகியவற்றைத் தூர்வாருவதற்கும், செப்பனிடுவதற்கும் ஓர் ஆய்வு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 83, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

83—

கோதுமை வழங்குதல்

***6404—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கோதுமை எத்தனை டன்?

(ஆ) குடும்ப அட்டைதாரர்களுக்குக் கோதுமை என்ன விலைக்கு விற்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) பொது விநியோகத் திட்டத்திற்காக, மத்திய தொகுப்பிலிருந்து இம்மாநிலத்திற்கு 1-7-2002 முதல் மாதந்தோறும் 10,000 டன்கள் கோதுமை, வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான விலையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. தற்போதைய நிலையில், மாத நுகர்வின் அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்திற்காக 5,000 டன்கள் வரையில் கோதுமை எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

(ஆ) நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ கோதுமை 7 ரூபாய், 50 பைசா என்ற விலையில் 24-7-2002 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.